DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

CC. No. 112/2015

Deposition of witness for P.W. 1

| | | | |
|---|---|---|---|
| Name | : கிரிசங்கர் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 19-01-2021

முதல் விசாரணை

நான் ஆனைக்கல்பாளையத்தில் குடியிருந்து கொண்டு டூரிஸ்ட் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையதுதான். அந்த கையொப்பம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதித்தன் பேரில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.

கடந்த 10.07.2013 ம் தேதி காலை 11.00 மணியளவில் திருநகர் காலனி தபால் அலுவலகம் அருகே வைத்து எனது நண்பர் சதீஷ்குமார் மற்றும் வினோத்குமார் ஆகிய இருவரும் என்னை சந்தித்து வியாபாரம் செய்யலாம் என்று கூறினார்கள். அதற்கு நான் என்ன வியாபாரம் என்று கேட்டதற்கு ஆன்லைன் லாட்டரி வியாபாரம் என்று கூறினார்கள். அவர்கள் என்னிடம் உனக்கு தெரிந்த நபர்களின் வங்கி கணக்கு மற்றும் ATM கார்டின் பின் நம்பர் ஆகியவைகளை வாங்கி கொடுத்தால் மாதம் 30,000 வரை கமிஷன் தருவதாகவும் கூறினார். நான் என்னுடைய வங்கி அக்கவுண்ட் நம்பர் 1332108032181 என்ற நம்பரை கொடுத்தேன். அதில் ATM கார்டின் பின் நம்பரையும் கொடுத்தேன். எனது நண்பர்களின் ATM கார்டு அக்கவுண்ட் நம்பர் மற்றும் பின் நம்பர்களை வாங்கி வர சொன்னதாகவும் பின்னர் நான் இந்த சம்பவம் தொடர்பாக சந்தேகம் அடைந்ததில் சதீஷ்குமார், வினோத் குமார் ஆகிய இருவரை பற்றியும் விசாரணை செய்ததில் அவர்கள் குமாரபாளையத்தை சேர்ந்த அலாவுதின், ராம்கி ஆகியோருடன் சேர்ந்து ஏராளமான நபர்களிடமிருந்து ATM கார்டுகளை வாங்கிக்கொண்டு அதை பெற்று பொதுமக்களிடம் லாட்டரி பணம் விழுந்திருப்பதாகவும் ஆசை காட்டி மேற்படி ATM கார்டுகளுக்குண்டான அக்கவுண்டில் பணம் கட்ட செய்து மோசடி செய்ததாக ஏமாற்றியதாகவும் பல பேரிடம் ஆன்லைன்

லாட்டரி வியாபாரம் செய்ததாகவும் இந்த சம்பவம் தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்துவிட்டு தற்போது எதிரிகள் தனது நண்பர்கள் என்பதால் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

CC. No. 112/2015

Deposition of witness for P.W. 2

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரகாஷ் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 19-01-2021

முதல் விசாரணை

நான் கல்லாங்காட்டு வலசில் குடியிருந்து கொண்டு சர்க்கரை மில்லில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அனுமதித்தன் பேரில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டது.

கடந்த 26.01.2013 ம் தேதி அலாவுதீன் என்பவர் ஈரோட்டில் உள்ள பஞ்சாப் நேஷனல் வங்கிக்கு வரச்சொன்னதன் பேரில் நான் அங்கு சென்றேன். அப்போது எனது தம்பி இளவரசன், மதன்குமார் ஆகியோரும் பஞ்சாப் நேஷனல் வங்கிக்கு வந்தார்கள். அலாவுதீன் எங்கள் மூவருக்கும் ரூபாய் 1000 கொடுத்தார். நாங்கள் மூவரும் எங்களுடைய பெயரில் வங்கி கணக்கு தொடங்கினோம். அந்த வங்கி கணக்கு எண் 01655000101345321 ஆகும். அதன் பின் 3 நாட்கள் கழித்து வங்கி கணக்கிற்குண்டான ATM கார்டுகளை பெற்று செல்லுமாறு கூறினார். அதன் பின் நாங்கள் மூவரும் 24.06.2013 ம் தேதி மேற்படி வங்கிக்கு சென்று அவரவர்க்கு உண்டான ATM கார்டுகளை பெற்றுக்கொண்டோம். அப்போது அலாவுதீன் எங்கள் மூவரின் ATM கார்டுகளை வாங்கிக்கொண்டும் ஆக்டிவேட் செய்து தருவதாகவும் அதன் பின்பு 3 நாட்கள் கழித்து ATM கார்டை கேட்டபோது ஆக்டிவேசன் ஆகவில்லை என்று கூறியதாகவும் நான் இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ததில் அவரது நண்பர்களான வினோத்குமார், ராம்கி, சதீஷ்குமார் ஆகியோர்கள் சேர்ந்து பல நபர்களை ஏமாற்றி நம்பிக்கை மோசடி செய்திருப்பதாகவும் நான் இந்த சம்பவம் தொடர்பாக போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரி தனது நண்பர்

என்பதால் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை இல்லை.